

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி 78 (அ) வட்ட கழக பகுதி பிரதிநிதி பா. லோகேஷ் –ஹேமலதா இல்ல விழாவில் பா.கௌசிகாவை சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்தினார். உடன் நியமனக்குழு உறுப்பினர் (பெருநகர சென்னை மாநகராட்சி எழும்பூர் வடக்குப் பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி., சென்னை கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் கோ.ஏகப்பன், சென்னை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கே.எஸ். இரவிச்சந்திரன், 78 (அ) வட்டக் கழக செயலாளர் ந.பாலு, எம்.தில்லைக்குமார், ப.சுப்புராயலு, ராஜேஸ்வரி ஸ்ரீதர், சு.மனோகரன், தி.தயாளன், வி.விஜயக்குமார், மு.முரளீதரன், எஸ்.நாராயணன், ப.விஜயகுமார், பெ.வெங்கடேசன், கோ.கோகுல், மதிவாணன், யோகேஷ் பாலாஜி, எம்.ராஜேந்திரன், வே.மோகன், எஸ்.ராஜேந்திரன், சி.குணசேகரன், எம்.பாலாஜி மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## ஆர்.கே. நகர் தொகுதிக்கு

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை!

## ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை,நவ.24-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதியில் பட்டேல் நகர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் மாணவ மாணவிகளுக்கான விலையில்லா மிதிவண்டி திட்டத்தை துவக்கி வைக்கவும் மற்றும் அனைத்து விளையாட்டுகளும் உள்ளடக்கிய பல்நோக்கு நவீன விளையாட்டு வளாகம் சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் அமைய உள்ளது . இதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டுகிறார் .

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மா .சுப்பிரமணியன் , அன்பில்மகேஷ் பொய்யாமொழி, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ,செஞ்சி கே.எஸ். மஸ்தான், கயல்விழி செல்வராஜ், மாவட்ட கழக செயலாளர் தா.இளைய அருணா , வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் வீ.கலாநிதி வீராசாமி, மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஆர்.டி.சேகர்,மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், பகுதிகழக செயலாளர்கள் எஸ். ஜெபதாஸ் பாண்டியன், இரா. லட்சுமணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாறு ஜே.ஜே. எபினேசர் கேட்டுக் கொண்டுள்ளார் .



வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள,கோவை மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில், முன்னாள் ஒன்றிய அமைச்சர் நினைவில் வாழும் முரசொலி மாறன் அவர்களின் 20 வது நினைவஞ்சலி நிகழ்வில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் கலந்து கொண்டு, முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ்,கல்பனா செந்தில்,மாநகர் மாவட்ட பொருளாளர் எஸ். எம். பி. முருகன்,பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி புஷ்பராஜ்,ராமநாதபுரம் பகுதி செயலாளர் ப.பசுபதி, மல்லிகை ராம்குமார், மாநகர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அக்ரிபாலு,டெம்போ சிவா, அர்ச்சுனன்,இலா. தேவசீலன்,சஞ்சய் குமார்,துரை கதிரவன், வட்டக்கழகச் செயலாளர் எஸ்.போஸ், த.பாலச்சந்திரன்,சாரமேடு இஸ்மாயில், மகளிரணி வசந்தி, வசந்தகுமார், ஆர்.எஸ்.புரம் பூபாலன், பூங்குயில் பாபு, வழக்கறிஞர் சீனிவாசன், குட்டி (எ)கார்த்திக், பிரின்ஸ், பொன்.கோவிந்தராஜ், மு.சந்திரசேகரன், ஸ்ரீதர், ஜோதிலட்சுமி, விஜயலட்சுமி,கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! செ.தமிழ்வேந்தன் தலைமை!

# திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு புகழரங்கம்!

## இயக்குனர் கரு.பழனியப்பன் - நடிகை குட்டி பத்மினி சிறப்புரையாற்றினர்!

சென்னை, நவ.24-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பகுதி செயலாளர்

செ.தமிழ் வேந்தன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் , அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்றது. இதில் இயக்குனர் கரு.பழனியப்பன், நடிகை குட்டி பத்மினி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 61-வது நிகழ்ச்சி

"கதை திரைக்கதை வசனம் கலைஞரே என்றைக்கும் சிகரம்" என்ற தலைப்பில்

22-11-2023 அன்று மாலை 6.00 மணிக்கு ஓட்டேரி ஹேம் ராஜ் திருமண மண்டபத்தில் பகுதி செயலாளர் செ.தமிழ் வேந்தன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் புகழரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இயக்குநர் கரு.பழனியப்பன், நடிகை குட்டி பத்மினி, தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., தாயகம் கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார், டி. லோகேஷ், பி.உதயசங்கர்,

கோ.ஏகப்பன், இசட். ஆசாத், புனிதவதி எத்திராசன், பி.ஜே.துளசிங்கம்,

சி. மகேஷ்குமார், ந.துலக்காணம், பெரோஸ்கான், ராஜ் முகமது, சுதா தீனதயாளன், ராஜேஷ்வரி ஸ்ரீதர், மு.சரவணன், ரமணி, லோகேஷ், பெரம்பூர் ராஜன், புல்லட் கி. ரமேஷ், புவனவதி, த.கருணாநிதி, எஸ்.புஷ்பராஜ், மா.ருத்ரமூர்த்தி,

எம்.இசட். அபோய், பரிமளா சுரேஷ்பாபு, ஜி.கிருஷ்ணகுமார்,சே.மணிமாறன்

பொல்லு சுரேஷ், எஸ். வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், சுவிட் பாபு, எம்.துரைசாமி, மதுரை பிரகாசம், ராஜராஜன், நாமதேவன், டி.ராஜி, நெல்லை மா.முத்தையா, வி.வீரமணி,இ. எஸ்.ரவிசந்திரன், ஆர்.தினேஷ், எப்.செபாஸ்டின், ஏ.சாக்ரடீஸ், ஜான், ரூபகாந்தன், டி.கிரிஜா, பகவத்சிங், கிரிஜா, சீமா, உஷா, பாப்பு, சரிதா, கவிதா,மாரி திவ்யா செல்வி ராமகிருஷ்ணன்,கமலகண்ணன், ஜி.சரன்ராஜ் ஜெ.மணிகண்டன், முகமது ரஃபி, சி. ஆனந்த், ஆர்.மனோஜ், ஜி.வினோத், கிஷோர், கிரிதரன், சரத், கோ.கருணாகரன், மூர்த்தி, ஜி.பிரேம், அரவிந்தன், எஸ்.கருணா, சந்தோஷ், சே. தியாகராஜன், விஜய், மாரியப்பன், வினோத், டேனி, ஜாபர் மற்றும் நூற்றுக்கணக்கான கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் பகுதிக்கு வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா அறிக்கை!



சென்னை,நவ.24

சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே. நகர் பகுதிக்கு வருகை தரும் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பதென்று மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா தெரிவித்துள்ளார்.

சென்னை வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா அவர்கள் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே. ஜே.எபினேசர் மற்றும் ஐட்ரீம் இரா மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தா இளையஅருணா அவர்கள் ஆர்கே நகர் சட்டமன்றத் தொகுதிக்கு விலையில்லா மிதிவண்டி மாணவ மாணவிகளுக்கு வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்திட வருகை தர இருக்கும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வைத்தியநாதன் மேம்பாலம் அருகில் மற்றும் சுண்ணாம்பு கால்வாய் ஆகிய பகுதிகளில் சிறப்பாக வரவேற்பினை அளிப்பதை குறித்தும் மற்றும் 27112023 பிறந்தநாள் காணும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளில் சென்னை வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து வட்டங்களிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்குவது குறித்து ஆலோசனை வழங்கினார்.

மேலும் இக் கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் பி.டி பாண்டிசெல்வம் இரா நரேந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி மாவட்ட கழக நிர்வாகிகள் மு.கோபி கமலக்கண்ணன் க.நாகம்மை வி.தயாளன் பகுதிகழக செயலாளர்கள் இரா.இலட்சுமணன் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் வ.பெ.சுரேஷ் இரா.செந்தில்குமார் க.ஜெயராமன் அ.முருகன் பொதுக்குழு உறுப்பினர் நா.சண்முகம் உள்ளிட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் வட்ட கழக செயலாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட கழக துணைச் செயலாளர் மு கோபி அவர்கள் நன்றி கூறினார்.

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமை!

# சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ப.பிரகாஷ் வேண்டுகோள்!

சென்னை, நவ. 24

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் இன்று (24.11.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, மாவட்டக் கழக அலுவலகம், எண். 29/32, காம்தார் நகர், முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமை வகிக்கிறார்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் குட்டி (எ) சுப்பிரமணி, ஜெ.எம்.எச்.இம்ரான் ஆரூண், ப.பாலசந்தர், வி.தினேஷ்குமார், என்.மோகனவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நான் (ப.பிரகாஷ்) அனைவரையும் வரவேற்று பேசுகிறேன்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதி, வட்டக் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

கழக இளைஞர் அணி செயலாளர் பிறந்தநாள் விழா, நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து இயக்கம், கலைஞர் நூற்றாண்டு நூலகம், மாரத்தான் போட்டி, பேச்சுப் போட்டி, டிசம்பர் 17 இளைஞர் அணி மாநில மாநாடு மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக்கழக

# இளைஞர் அணி-மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன்தலைமையில் நடைபெறுகிறது!

காஞ்சிபுரம்,நவ.24-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் 25.11.2023சனிக்கிழமைபகல்11.00மணியளவில் அடையாரில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர்தா. மோ.அன்பரசன்அவர்களின் தலைமையிலும்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்மற்றும் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி மாணவர் அணி பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று அவசியம் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அதுபோது,

கழகஇளைஞர் அணி செயலாளர் பிறந்தநாள் விழாவை

எளியோர்எழுச்சிநாளாககொண்டாடுவது குறித்து,

டிசம்பர் 17 அன்று சேலத்தில் நடைபெற உள்ள மாநில மாநாட்டில் இளைஞர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்பது குறித்து ஆலோசப்படுகிறது. என்று மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி வரும் (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படுகின்றது. அதற்கான அழைப்பிதழை சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசுவிடம் சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி. ஆர். விஜய் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் முனைவர் ஜி. ஜெகதீசன், பிரசன்ன ராஜகுமாரி ஆகியோர் வழங்கினர்.

# சென்னை தென் மேற்கு மாவட்ட பகுதிச் செயலாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்ட பகுதிச்செயலாளர்கள் கூட்டம் நாளை (25.11.2023) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் சி.பி. ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட நிர்வாகிகள், பகுதிச்செயலாளர்கள், தவறாமல் | கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, பாக முகவர்கள் பணி குறித்து மற்றும் கழக ஆக்க பணிகள்

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.



திரு.வி.க.நகர் தொகுதி கே.எம்.கார்டன் பகுதியில் இருந்து மழைநீரை வெளியேற்றும் "மோட்டார் ரூம்மினை மாநகராட்சி அதிகாரியுடன் சென்று பார்வையிட்டு கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி ஆய்வு மேற்கொண்டார். 76–வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.தமிழ்ச்செல்வி, வட்ட செயலாளர்கள் எஸ்.வெங்கடேசன், எஸ்.சசிகுமார் மற்றும் மாவட்ட பிரதிநிதி திவாகர், வீரா,சுரேஷ், ஜெயபால் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தொடர் மழையால் பாதிக்கப்பட்ட

# சைதை 169 'அ' வட்டம் ஜோதியம்மாள் நகரில் உணவு!

## எஸ்.ராதாகிருஷ்ணன் - சோ.முருகையன் வழங்கினர்!

சென்னை, நவ. 24 -

சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டம் தொடர் மழையால் வாழ்வாதாரம் இழந்து பாதிக்கப்பட்ட ஜோதியம்மாள் நகர் வாழ் மக்களுக்கு மாவட்டப் பிரதிநிதி எஸ். ராதாகிருஷ்ணன் வட்ட துணைச் செயலாளர் சோ.முருகையன் ஆகியோர் நேற்று மதிய உணவு வழங்கினர்.


சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆணைக்கிணங்கவும், சைதை கிழக்குப் பகுதிக் கழக செயலாளரும் சென்னை பெருநகர மாநகராட்சியின் 13 வது மண்டல குழுத் தலைவருமான இரா. துரைராஜ் அறிவுறுத்தலின்படி சைதை கிழக்கு பகுதி 169 - வது அ வட்டம் ஜோதியம்மாள் நகரில் சென்னை தெற்கு மாவட்ட பிரதிநிதி சைதை எஸ் ராதாகிருஷ்ணன் ஏற்பாட்டில் வட்ட துணைச் செயலாளர் சோ.முருகயன் தலைமையில் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு மதியம் உணவு வழங்கப்பட்டது.

இதில் பகுதி துணைச் செயலாளர் திருமதி பாக்கியலட்சுமி, மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு மாவட்ட தலைவர் கரிமுல்லா, சைதை கிழக்கு பகுதி மீனவர் அணி அமைப்பாளர் சி.கே. பாபு மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த தோழர் ஜோசப் மற்றும் குணசேகரன் மற்றும் ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அண்ணாநகர் வடக்குப் பகுதி

# 100வது வட்டம் பி.பாண்டியன் மனைவி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி



சென்னை, நவ.24-


சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்குப் பகுதி 100வது வட்டம் மொழிப்போர் தியாகி பகுதி பிரதிநிதி பி.பாண்டியனின் மனைவி பி.சிவகாமி நேற்று (23112023) பகல் 1 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த திருமதி. பி.சிவகாமி அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (24.11.2023- வெள்ளிக்கிழமை) மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து (எண்.98, பி.பி.கார்டன் முதல் தெரு, அமைந்தகரை, சென்னை-29) புறப்பட்டு கீழ்ப்பாக்கம் கார்டனில் உள்ள பெரிய கல்லரையில் உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவொற்றியூர் க.வீராசாமி
### நவம்பர் 24 (2008)



திருவொற்றியூர் நகரத்தில் ஆரம்பகால கழகத் தோழர்.

திருவொற்றியூர் நகரக் கழக அவைத்தலைவராக, மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். கழகத்தின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றவர்.

திருவொற்றியூர் நகரமன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும், அசோக்லேலண்ட் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மற்றும் நாணய சங்கத்தின் தலைவராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்ட தொ.மு.ச. மாவட்ட தலைவராக பணியாற்றி தொழிலாளர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**